LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

U.G. DEGREE EXAMINATION – **LANGUAGES**

FIRSTSEMESTER – APRIL 2017

TL 1083- GENERAL TAMIL - I

Date: 28-04-2017 Dept. No. Max. : 100 Marks
09:00-12:00

பகுதி - அ (10 x 2 = 20 மதிப்பெண்கள்)

<u>விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.</u>

01. 'நீலவான் ஆடைக்குள் உடல்மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை' – பொருள் தருக.
02. 'அன்பு செய்தாருக்கு அன்பு – என்றால்
ஆனந்தம் அதிலென்ன உண்டு?' – விளக்கம் தருக.
03. 'மரம்வெட்டிய கோடாரி பார்த்துக்கொள் கடைசி மழைத்துளி' – விளக்குக.
04. பொருளுடையோரையும் அருளுடையோரையும் எங்ஙனம் கண்டுபிடிக்கலாம் என பட்டினத்தார் குறிப்பிடுகின்றார்?
05. ஔவையார் குறிப்பிடும் மூவகை மக்கள் யாவர்?
06. நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும் – எவை?
07. தற்காலக் கவிஞர்கள் நால்வரைக் குறிப்பிடுக.
08. தமிழ்த்தென்றல் மற்றும் சொல்லின் செல்வர் என்று அழைக்கப்படுபவர்கள் யாவர்?
09. கறை, கரை; வலி, வளி – பொருள் தருக.
10. கிடா, உத்திரவு, சிகப்பு, புட்டு – உரிய சொல் தருக.

பகுதி - ஆ (8 x 5 = 40 மதிப்பெண்கள்)

<u>விடையொன்றுக்கு 150 சொற்களில் எவையேனும் எட்டனுக்கு விடையளிக்க.</u>

11. நவீன இந்தியா குறித்த பாரதியாரின் சிந்தனைகளை எழுதுக.
12. வைரமுத்துவின் சுனாமி கவிதை குறித்து விளக்குக.
13. தோழமை உறவை அசைபோடும் எஞ்சோட்டுப்பெண் கதையினை ஆராய்க.
14. ஒன்றேகுலம் ஒருவனே தேவன், நீயே இறைவனின் ஆலயம், தானச்சிறப்பு என்றமைந்த திருமந்திரப் பாடல் கருத்துகளை விளக்குக.
15. குற்றாலக் குறவஞ்சியில் அமைந்த மலைவளத்தைக் குறிப்பிடுக.
16. ஐக்கூக் கவிதை என்றால் என்ன? விளக்குக.
17. தமிழ் ஒரு செவ்வியல் எனும் தலைப்பிலமைந்த கட்டுரையின் கருத்துகளை எழுதுக.
18. கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் சிறுகதை உணர்த்தும் செய்திகளை எழுதுக.
19. 'குருவிக்கூடு' சிறுகதையினை ஆய்க.
20. தொடர்பிழை நீக்குக.
அ) வாழ்விலோர் திருநாள் கல்லூரி நாளன்றோ! ஆ) தேர்தல் முடிவுகள் மகிழ்ச்சி தந்தது.
இ) நகரப் பேருந்துகள் ஏன் மெதுவாகச் செல்கின்றது? ஈ) ப்ராடளங்களை எப்படி சால்வ் செய்யப் போறே.
உ) OK அடுத்த கொஸ்டீனைப் பார்க்கலாமா?

பகுதி - இ (4 x 10 = 40 மதிப்பெண்கள்)

<u>விடையொன்றுக்கு 300 சொற்களில் விடையளிக்க.</u>

21. தமிழ் மொழியின் மேன்மைகளை விளக்கும் விதமாக அமைந்துள்ள தமிழ்தெய்வ வணக்கப் பாடலை விவரித்தெழுதுக
(அல்லது)
முத்தொள்ளாயிரப் பாடல்கள் வாயிலாக மூவேந்தர்கள் குறித்து அறியப்படும் சிறப்புகளை எடுத்துரைக்க.
22. மேலைநாட்டுத் தமிழறிஞர்களின் தமிழ்ப்பணியினை விவரிக்க.
(அல்லது)
சிற்றிலக்கியங்கள் குறித்து விளக்கி எழுதுக.
23. 'மொழிப்பற்று' எனும் தலைப்பினில் க.ப. அறவாணன் கூறும் கருத்துகளை விளக்குக.
(அல்லது)
மு.வரதராசனாரின் 'எளிமை ஓர் அறம்' எனும் தலைப்பில் அமைந்த கட்டுரைச் செய்திகளைக் கட்டுரைக்க.
24. 'குறட்டை ஒலி' சிறுகதையின் வழி வெளிப்படும் ஏழ்மையின் அவலத்தைக் குறித்து எழுதுக.
(அல்லது)
'வலி' எனும் சிறுகதை குறித்து ஆய்க.